1984 பிப்ரவரி 15]

சொன்னார்கள். தண்ணீர் இல்லை என்று சொன்னார்கள். அந்தத் தொகுதியை சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இப்போது அந்தக் கிணற்றிலே தண்ணீர் இருக்கிறது, இனி வெட்ட வேண்டிய அவசியம் இல்லை. இப்பொழுதே பம்ப்செட் போட்டு விட வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆகையினால் உண்மையான தகவல்களைச் சேகரிப்பதில் ஏன் இத்தகைய முரண்பாடு? உண்மையான நிலை என்ன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலுவலர்கள் என்ன செயற்குறிப்பை கொடுக்கிறார்களோ, அதை வைத்துத்தான் நான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, உண்மையான நிலையைக் கண்டறிந்து உறுப்பினர் அவர்கள் சொன்னால், உடனடிப்பாக நடவடிக்கை எடுத்து அதன் மூலமாக நிவாரணப் பணிகளை தொடர்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி ஒன்றியத்தில் மாரனேரி கிராமத்தில் உள்ளது போல் சமுதாயக் கிணறு வெட்டி, தண்ணீர் கிடைத்த பிறகு பம்ப்செட் இல்லாத காரணத்தால் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அது போலவே வறட்சி நிவாரணத்திற்காக பல இடங்களில் கிணறு வெட்டி தண்ணீர் கிடைத்த பிறகும், பம்ப் செட்டுகள் அங்கே அமைக்கப்படாத காரணத்தால், அவைகள் உபயோகம் இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, அப்படி வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் வெட்டப்பட்ட கிணறுகளுக்கு பம்ப் செட்டுகளை வைக்க அரசு தீவிர நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகர்சாமி முதவில் கேட்டது போன்ற பொதுவான கேள்விதான் இதுவும். இந்த வினாவிற்கு சம்பந்தமில்லை.

ஈரோட்டிலிருந்து புறப்படும் படுக்கை வசதியுடன் கூடிய பேருந்தில்
சட்டமன்ற உறுப்பினர்கள் இலவசமாகப் பயணம் செய்ய
அனுமதியளிக்கும் திட்டம்.

*29வினா எண் 17118:— திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சட்டமன்ற உறுப்பினர்கள் அரசின் அனைத்துப் பேருந்து களிலும் இலவசமாகப் பயணம் செய்யலாமென்று அனுமதிக்கப் பட்டும், ஈரோட்டிலிருந்து புறப்படும் படுக்கை வசதியுடன் கூடிய பேருந்தில் அனுமதிக்கப்படாதது ஏன்?

மாண்புமிகு திரு க. முத்துசாமி : இப்பேருந்தில் படுக்கை வசதியுடன் பதினாறு பயணிகள் மட்டுமே பயணம் செய்ய முடியும். எனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இதில் இலவசமாக பயணம் செய்ய அனுமதி அளிக்க இயலாது என்று திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் கூறியுள்ளது.

திரு. தி கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, மற்றப் பேருந்துகளில் சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களோடு பயணம் செய்ய இன்னொருவருக்கும் அனுமதி கொடுக்கப்பட்டு இணைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையினால்

இந்தப் பேருந்துகளில் குறைந்தபட்சம் எங்களை மட்டுமாவது அனுமதிக்க மறு பரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; தலைவர் அவர்களே, அப்படி இப்போது அனுமதிக்கப்படுமேயானால், அடுத்த ஆண்டு எங்களோடு இன்னொருவரையும் சேர்த்து பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வரும். எனவே இப்போதைக்கு அனுமதிக்கவில்லை.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே சட்டமன்ற உறுப்பினர்கள் பணம் கொடுத்து பயணம் செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்ற வாக்குறுதி தந்தால், படுக்கை வசதியோடு கூடிய இத்தகைய பேருந்துகளில், நேரடி ரயில் வசதி இல்லாத நாகர்கோவில் போன்ற பகுதிகளுக்காவது அனுமதிக்கப் படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற பேருந்துகளையும் சேர்த்தா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம்.

*30வினா எண் 18392—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தில் பணி புரியும் ஊழியர்கள் எத்தனை பேர்?

(ஆ) ஊழியர்களுக்குக் குடியிருப்பு மனை வழங்க போக்கு வரத்துக் கழகம் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 31–3–1983 அன்று கணக்குப்படி 5805 ஊழியர்கள் பணிபுரிகின்றனர்.

(ஆ) "உங்களுக்கு ஒரு சொந்த வீடு" என்ற திட்டத்தின் கீழ் சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க ஏற்கனவே நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. முதல் தொடக்கமாக, தஞ்சை மாவட்டத்தில் 87 வீடுகளும், திருச்சி மாவட்டத்தில் 100 வீடுகளும் கட்டுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.